<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் **திரு.M.நம்பிராஜன்,பி.ஏ.,பி.எல்.,** 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண்.493/2021** **நாள்: 17.04.2026** **பி.வா.சா.1 – மாலதி**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை -</u>**

1. நான் டிப்ளமோ சிவில் படித்துள்ளேன். நான் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பணி மேற்பார்வையாளராக வேலை பார்த்து வருகிறேன். நான் வாதியாகிய உங்களிடம் ரூ.9 லட்சம் கடனாக பெற்றுக்கொண்டு அதை திருப்பி செலுத்தும் பொருட்டு காசோலை ரூ.9 லட்சம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கொடுத்த காசோலையை வாதி வசூலுக்கு தாக்கல் செய்த போது போதிய பணம் இல்லை என்று திரும்ப வந்தது என்றால் சாட்சி திரும்ப வந்தது உண்மை, ஆனால் ரூ.2.5 லட்சத்திற்கு காசோலை கொடுத்தேன், அதை ரூ.9 லட்சமாக நிரப்பி வாதி வசூலுக்கு தாக்கல் செய்ததால் அதில் போதிய பணம் இல்லை என்று திரும்ப வந்தது என்று கூறுகிறார். காசோலை திருப்பப்பட்ட விவரம் குறித்து வாதி எனக்கு வீடு மற்றும் அலுவலக முகவரிக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

2. மேற்படி காசோலை திருப்பப்பட்டது சம்பந்தமாக வாதி உடுமலைபேட்டை, நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 ல் என் மீது காசோலை மோசடி வழக்கு STC No.701/2019 என்ற வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான். மேற்படி காசோலை தொகையையும் வட்டியையும் சேர்த்து வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி காசோலை வழக்கு தாக்கல் செய்த பிறகு நான் வாதியிடம் காசோலை தொகையை தந்துவிடுவதாகவும், வட்டி மற்றும் வழக்கு செலவை பின்னிட்டு தருவதாகவும் அதனடிப்படையில் தாவா வழக்கை வாபஸ் பெற வேண்டும் என்று வாதியை

கேட்டு கொண்டேன் என்றால் சரியல்ல. 16.11.2022 அன்று நான் வாதிக்கு ரூ.8.25 லட்சத்தை செலுத்திவிட்டு மீத தொகை ரூ.75,000 த்தை விரைவில் தந்துவிடுவதாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

3. 16.11.2022 அன்று என் மீது உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் வாதி ரூ.9 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்று ரசீது என்னிடம் வழங்கினார் என்றால் சாட்சி ரூ.9 லட்சத்தை பெற்றுகொண்டு தான் வாதி ரசீது வழங்கினார், நான் பாக்கி தொகை திரும்ப செலுத்துவதாக ஒரு போதும் வாதியிடம் தெரிவிக்கவில்லை என்று கூறுகிறார். நான் உறுதியளித்த படி ரூ.75,000 வாதியிடம் நான் செலுத்தவில்லை என்றால் சாட்சி நான் உறுதியே வாதியிடம் அளிக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். நான் பெற்ற ரசீதில் வட்டியும் மற்றும் செலவு தொகையும் நான் செலுத்திவிட்டதாக வாசகங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். என் மீது உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் காசோலை தொகைக்கான வட்டியையும், வழக்கு செலவு தொகையையும் நான் தந்துவிடுவேன் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் காசோலை வழக்கை வாதி வாபஸ் வாங்கினார் என்றும், எனக்கு ரசீது வழங்கினார் என்றும், உறுதிமொழி ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல.

4. நான் கொடுக்க வேண்டிய மீத தொகை ரூ.75,000 த்தை State Bank of India வங்கியில் கடந்த 22.11.2022 அன்று வாதி வங்கி கணக்கிற்கு செலுத்தினேன் என்றால் சரியல்ல, மேற்படி வங்கியில் செலுத்திய பணத்திற்கான செல்லானில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் தான், ஆனால் மேற்படி தொகை நான் வாங்கிய கடனுக்காக வாதிக்கு செலுத்தப்பட்ட தொகை அல்ல, எனது தம்பி மணிகண்டன் வாதியிடம் வாங்கிய கடனுக்காக நான் செலுத்திய தொகையாகும் என்று சாட்சி கூறுகிறார். மேற்படி மணிகண்டன் வாதியிடம் கடனே வாங்கவில்லை என்றும், நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 22.11.2022 அன்று நான் காசோலை வழக்கை வாதி வாபஸ் வாங்கும் போது காசோலை தொகைக்கான வட்டியையும்,

வழக்கு செலவு தொகையையும் பின்னாளில் தருவதாக வாதியிடம் உறுதியளித்து, உறுதிமொழி ஆவணம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல.

5. நான் உறுதியளித்த படி வழக்கு செலவு தொகையையும், காசோலை தொகை ரூ.9 லட்சத்திற்கான வட்டியையும், வாதியிடம் நான் செலுத்தவில்லை என்றால் சாட்சி நான் அவ்வாறு உறுதியளிக்கவே இல்லை என்று கூறுகிறார். நான் வாங்கிய ரூ.9 லட்சத்திற்கு வட்டியும், வழக்கு செலவு தொகையும், வாதிக்கு நான் வழங்கவில்லை என்றால் சரிதான், ஏனென்றால் நான் அவ்வாறு தருவதாக வாதியிடம் ஒரு போதும் உறுதியளிக்கவில்லை, வாங்கிய கடனை வட்டியுடனும், செலவு தொகையுடனும், வாதியிடம் 16.11.2022–ல் செலுத்திவிட்டதால், நான் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்வதற்கான அவசியம் இல்லை என்று சாட்சி கூறுகிறார். நான் வாதிக்கு வாங்கிய கடனுக்கான வட்டியும், வழக்கு செலவு தொகையும் செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் விவரம் சொல்லி தான் வழக்கறிஞர் எதிர்வழக்குரை தயார் செய்தார் என்றால் சரிதான்.

6. நான் எதிர்வழக்குரையை படித்து பார்த்து தான் கையொப்பம் போட்டேன் என்றால் சரிதான். நான் முதலவதாக தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இரண்டாவதாக தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் வா.சா.ஆ.10, 11 மற்றும் 16 ஆகிய ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்த பிறகு நான் எனது கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் எனது தம்பி மணிகண்டன் ரூ.1.25 லட்சம் வாதியிடம் கடன் வாங்கியதாகவும், மேற்படி கடன் தொகையில் ரூ.75,000 த்தை வாதி செலுத்த வேண்டும் என்று கேட்டு கொண்டதன் பேரில் நான் வாதிக்கு மேற்படி தொகையை வங்கி மூலம் செலுத்தினேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

7. மேற்படி எனது தம்பி கடனுக்காக வாதி கேட்டு கொண்டதாக நான் சொல்வதற்கு எவ்வித ஆவணமும் ஆதரவாக நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சங்கதி உண்மையாக இருந்திருந்தால் நான் மேற்படி விவரத்தை நான் முதலில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் தெரிவித்திருப்பேன் என்றும், அவ்வாறு சொல்லாததால் மேற்படி விவரம் பொய் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வா.சா.ஆ.10, 11 மற்றும் 16 ஆகிய ஆவணங்கள் வாதி தரப்பில் தாக்கல் செய்த பிறகு நான் பொய்யான சங்கதிகளை தெரிவித்து எனது கூடுதல் எதிர்வழக்குரையில் தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தம்பி கடன் வாங்கியது சம்பந்தமாக வாதி என்னிடம் கேட்டார் என்று நான் காவல் நிலையத்தில் அது சம்பந்தமாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

8. நான் சொல்வது போல் வாதிக்கும், எனது தம்பி மணிகண்டனுக்கும் வரவு செலவு இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10, 11 மற்றும் 16 தெரிவிக்கப்பட்டுள்ள சங்கதிகளை மறுக்கும் வகையில் நான் பொய்யாக எனது தம்பி மணிகண்டன் வாதியிடம் கடன் வாங்கியதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய செயலால் வாதிக்கு மனதளவிலும், பண அளவிலும் இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதியிடமிருந்து எதிர்பாத்தியமாக ரூ.10,10,000/– கோரியுள்ளது தவறு என்றால் சரியல்ல. மேற்படி என்னுடைய எதிர்பாத்தியம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ரூ.9 லட்சத்திற்கான வட்டி மற்றும் வழக்கு செலவு தொகையை செலுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. நான் என்னுடைய முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் ரூ.2.5 லட்சம் வாதியிடம் கடன் வாங்கியதாக தெரிவித்துள்ளது பொய் என்றால் சரியல்ல.

9. காசோலை மோசடி வழக்கு சம்பந்தமாக வாதி அனுப்பிய அறிவிப்பை நான் பெற்று கொண்டேன் என்றால் சரிதான். வாதியிடம் நான் ரூ.2.5 லட்சம் கடன் வாங்கியதற்கு ரூ.9 லட்சம் கடன் வாங்கியதாக வாதி அறிவிப்பு

அனுப்பியதற்கு நான் காவல் நிலையத்திலோ, நீதிமன்றத்திலோ வாதி மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு காசோலை வழக்கு சம்பந்தமாக முதலில் ரூ.8.25 லட்சமும் பின்னிட்டு ரூ.75,000 ம் கொடுத்து வாங்கிய கடனை தீர்த்துள்ளேன் என்றால் சரியல்ல, மொத்தமாக ரூ.9 லட்சம் வாதியிடம் செலுத்தினேன் என்று சாட்சி கூறுகிறார். நான் ரூ.2.5 லட்சம் மட்டும் வாதியிடம் கடன் வாங்கியதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் ரூ.2.5 லட்சம் தான் கடன் வாங்கினேன் என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. நான் எதிர்வழக்குரையில் 10வது பத்தியில் ரூ.9 லட்சத்தையும், அதற்கான வட்டியையும் வழக்கு செலவு தொகையும் வாதிக்கு செலுத்திவிட்டேன் என்று சொல்லியுள்ளேன் அதற்கான ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல்ச செய்யவில்லை என்றால் சாட்சி காசோலை தொகையும், வட்டியும், வழக்கு செலவு தொகையும் சேர்த்து ரூ.9 லட்சமாக செலுத்தியுள்ளதாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று கூறுகிறார். எதிர்வழக்குரையில் 16.11.2022 அன்று ரூ.9 லட்சம் மட்டும் அதாவது அசல் கடன் தொகையை மட்டும் செலுத்தியதாக தான் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எனவே வட்டியும், வழக்கு செலவு தொகையும் செலுத்தவில்லை என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் வாங்கிய கடனுக்கான வட்டியும், வழக்கு செலவு தொகையும் வாதிக்கு செலுத்தியதாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. 22.11.2022 அன்று உறுதி மொழி ஆவணம் இரண்டு பிரதியில் நான் வாதியிடம் கையொப்பம் வாங்கினேன் என்றால் சரியல்ல, இரு தரப்பு வழக்கறிஞர்களும் சேர்ந்து தான் கையொப்பம் வாங்கினார்கள் என்று சாட்சி கூறுகிறார். நான் தான் கையொப்பம் வாங்கினேன் என்றும், அதில் நானும் கையொப்பம் போட்டேன் என்றால் சரியல்ல. நான் 22.11.2022 அன்று உறுதிமொழி கூறியவாறு வட்டியும், வழக்கு செலவும் செலுத்தாமல் வாதிக்கு

ரூ.75,000 மட்டும் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. உறுதி மொழி ஆவணம் கையொப்பமிடுவதற்கு வாதி ஒரு சாட்சியை அழைத்து வர வேண்டும், நான் ஒரு சாட்சியை அழைத்து வருகிறேன் என்றும் கூறினேன் என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பம் போடாததால் மேற்படி உறுதிமொழி ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்பாத்திய கோரிக்கை தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

M NAMBIRAJAN
Digitally signed by M NAMBIRAJAN
Date: 2026.04.17 17:18:32 +0530

4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,

உடுமலைப்பேட்டை.